04.01.2024

**OS. 133 / 2023 வா.சா. 2. கணபதி, த/பெ. கன்னையா**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு
**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி மெய்யப்பன் அழைத்ததால் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் வாதி கூறியதா என்றால் இல்லை, எனக்கு தெரியும். வாதி மெய்யப்பன் பிரதிவாதி அய்யாவு மீது எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் இடத்து பிரச்சனைக்காக போட்டுள்ளார். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அகவயல் வட்டம், நத்தம் சொத்து. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண் 11/12. இதற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி அய்யாவுவின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியும், காசி. காசியின் இனிஷியல் தெரியுமா என்றால் தெரியும், முத்தையா என்று கூப்பிடுவார்கள், ஆனால் பெயர் முத்தன். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் அருணாச்சலம் மனைவி மாரியாயி, மாரியாயி மகன் படிக்காசி அவர்களிடமிருந்து வாங்கியதாக சொல்வார்கள். 1994 ல் மாரியாயி, மாரியாயி மகன் படிக்காசி ஆகியோரிடமிருந்து கிரயம் வாங்கியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த கிரயப் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் வாங்கியபோது தெரியும். வழக்கு சொத்து தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் அய்யாவுவிடம் உள்ளது. வழக்கு சொத்தில் கொட்டகை போட்டுள்ளனர். வழக்கு சொத்தின் வருவாய் ஆவணங்கள் யாருடைய பெயரில் உள்ளது என்றால் தற்போது மெய்யப்பன் பெயரில் உள்ளது. வழக்கு சொத்து பிரதிவாதி அய்யாவுவின் தகப்பனார் காசிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருணாச்சலம் ஆசாரியின் வாரிசுகளிடமிருந்து வாதி மெய்யப்பன் 1994 ல் மோசடியாக கிரயம் பெற்றுள்ளதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதி அய்யாவுவிற்கும் தனிப்பட்ட முறையில் விரோதம் இருப்பதால் அதனை சாதமாக எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**